# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண்.124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)
144, அண்ணா சாலை, சென்னை–600 002.

தலைமையகம்: சென்னை. தேதி : 18.01.2016

## 02.02.2016 – நுழைவாயிற் கூட்டம்

அன்பு பொறியாளர்களே,

வணக்கம். பலமுறை வாரியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வாரியம் நமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அமல்படுத்திடுவதாக அறிவித்தபின்னரும் நமது கோரிக்கைகள் நியாயமற்று அமல்படுத்தப்படாமல் காலதாமதம் ஏற்படுவதை தவிர்த்து உடனடியாக அமல்படுத்திட வேண்டி கடந்த 25.02.2015 அன்று தமிழகம் முழுவதும் அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பாக நுழைவாயிற் கூட்டங்களும் அதனைத்தொடர்ந்து 17.03.2015 அன்று சென்னை வாரிய வளாகம் முன்பாக தமிழகம் தழுவிய "கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்" நடத்தப்பட்டது. 5000க்கும் மேற்பட்ட பொறியாளர்கள் இப்போராட்டங்களில் நேரடியாக கலந்து கொண்டு தங்களது உணர்வுகளை வாரியத்திற்கும், அரசிற்கும் வெளிப்படுத்தினார்கள். நமது கோரிக்கைகளில் ஒன்று கூட புதிதில்லை.

நமது கோரிக்கைகளின் மீது 16.03.2015 அன்று தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையில் நமது கோரிக்கைகளின் மீதான வாரியத்தின் நிலையை, கோப்புகளின் நிலையை தெரிவித்தார். ஆனால் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கைவிடவோ, தள்ளிவைக்கவோ கூட கேட்கவில்லை. ஏனென்றால் அத்தனை முறை கோரிக்கைகள் தொடர்பாக வாரியத்துடன் பேசி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் குறிப்பாக உதவிச் செயற் பொறியாளர் / சார்பும், இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வுகளும் அடங்கும்.

17.03.2015 கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது உறுப்பினர்களிடையே மிகப்பெரிய எழுச்சியை வாரியம் உணாந்த போதும், பட்டயப் பொறியாளர்களுக்கு நியாயம் மறுக்கப்பட்டுள்ளது என்பதை தொழிற்சங்கங்களும், ஊடகங்களும் வெளிப்படுத்திய பின்னரும் வாரியமும், வாரியத் தலைமையும் மௌனம் காத்தது.

19.03.2015 அன்று வாரியத்தலைவர் அவர்களை சந்தித்தபோது நம்மிடம் தனக்கு நடவடிக்கை மேற்கொள்ள அவகாசம் அளிக்கப்படவில்லை என்று வருத்தத்தை தெரிவித்தார்.

நாம், வாரியம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை அமல்படுத்திட இதுவரை வாரியத்தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் நடத்திய பேச்சுவார்த்தைகள், முறையீடுகள், ஏற்பட்ட ஒப்பந்தங்கள் ஆகியவற்றை எடுத்துரைத்த பின்னர் வாரியத்தலைவர் அவர்கள்;

- உதவி செயற் பொறியாளர் / சார்பு – வழங்குவதாக ஏற்கனவே நாங்கள் முடிவெடுத்துவிட்டோம், அந்த கோரிக்கை உடனே அமல்படுத்தப்படும். அடுத்து பதவி உயர்வுகள், உள்முகத்தேர்வுகள் போன்றவை முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.
- நிலுவையிலுள்ள மற்ற கோரிக்கைகள் தொடர்பாக நான் கோப்புகளை பார்த்து முடிவெடுக்கவேண்டும். அதற்கு கால அவகாசம் தேவை.
- நீங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுங்கள் உங்கள் கோரிக்கைகள் அமல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள்.

19.03.2015 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் நமது தீர்மானத்தில் தெரிவித்த கோரிக்கைகளை படித்த பின்னர்,

www.fromoldbooks.org

❖ அனைத்தும் ஏற்கனவே பேசப்பட்டவைதான், ஒன்றும் புதிதல்ல. வாரியத்தலைவருக்கு கோரிக்கைகளை அமல்படுத்திட தெரிவித்துள்ளேன். விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

உதவி செயற் பொறியாளர் / சார்பு வாரியக் கூட்டத்தில் வைத்து அனுமதி பெற்றிட பணியமைப்பு நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டது. வாரிய விதிகளுக்கு முரணாக, முன்பு எடுக்கப்பட்ட உதவி செயற் பொறியாளர் / சார்பு முடிவுக்கு எதிராக, 14 ஆண்டுகள் பணிமுடித்த இளநிலைப் பொறியாளர் முதல் நிலைக்கு உதவி செயற் பொறியாளர் / சார்பு வழங்காமல் 3:1 விகிதாச்சாரத்தில் 9 ஆண்டுகளுக்கும் குறைவாக உள்ள உதவிப் பொறியாளர்களுக்கும், உதவி செயற் பொறியாளர் / சார்பு வழங்கிட கோப்பு அனுப்பப்பட்டது. பதவி உயர்வின்றி தேக்கமுற்று பணி ஓய்வு பெறுகின்ற தருவாயில் இளநிலைப் பொறியாளர் முதல் நிலைக்கு வழங்கப்படும் ஆறுதலான தற்காலிக பதவி உயர்வு என்பதை கருத்தில் கொள்ளாமல் விகிதாச்சாரத்தை புகுத்தி ஆறுதலான பதவி உயர்வையும் தடுத்திடும் வகையில் வேண்டுமென்றே பணியமைப்பு நிர்வாகம் கழகத்துடன் இணைந்து செய்திட்ட திட்டமிட்ட செயல் இது.

வாரிய கூட்டத்தில், வாரிய உறுப்பினர்கள் உதவி செயற் பொறியாளர் / சார்பில் வாரியம் எடுத்துள்ள முரண்பட்ட நிலையை விளக்கக் கேட்டும் சரியான பதிலினை வாரியம் அளிக்கவில்லை என்று தெரிகிறது. இதனால் மேலும் தகவல்களுடன் இதனை பரிசீலனைக்கு எடுத்திட கேட்டுக்கொண்டு கோரிக்கையை நிலுவையில் வைத்துள்ளது. பணியமைப்பு நிர்வாகமே தாமதங்களுக்கு காரணம்.

17.03.2015க்கு பின்னர் பலமுறை வாரியக்கூட்டங்கள் நடைபெற்ற போதும் உதவி செயற் பொறியாளர் / சார்பு, 19.03.2015 அன்று வாரியத்தலைவர் அவர்கள் அளித்த உறுதியின்படியும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடியும் இதுவரை அமல்படுத்தப்படவில்லை. ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை அமல்படுத்திட முனைப்பு காட்டப்படவில்லை. குறிப்பாக மிகக்கடுமையான பணிச்சூழலில் பணியாற்றிவரும் பட்டயப் பொறியாளர்களின் உணர்வுகளை வாரியம் உதாசீனப்படுத்துவது மிகுந்த வேதனையையும், காயத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த காயம் வாரியத்தால் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

நீதிமன்ற தீர்ப்புக்கு பின்னர் இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. நீதிமன்றத்தில் சங்கமும், வாரியமும் இணைந்து வாதிட்டுதான் தீர்ப்புகளை பெற்றுள்ளோம் நன்றி பாராட்டுகிறோம். இருப்பினும் அதனை நடைமுறைப்படுத்தி பதவி உயர்வுகள் வழங்கிட பணியமைப்பு நிர்வாகம் காட்டிய தயக்கம், ஏற்படுத்திய குழப்பம் மிகுந்த வேதனையும், வருத்தமும் அளிப்பதாக உள்ளது.

பட்டயப் பொறியாளர் நலனில், கோரிக்கைகளை அமல் படுத்துவதில், பணியமைப்பு நிர்வாகம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

<u>குறிப்பாக</u>:

- ✓ 31.12.2015க்குள் வழங்கி இருக்க வேண்டிய உதவிப் பொறியாளர் / உள்முகத்தேர்வுகள் வாரியத்திற்கு வெளியிலுள்ள பட்டப் பொறியாளர்கள் நலனுக்காக (AE / DR) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
- ✓ இளநிலைப் பொறியாளர் முதல் நிலை மின்னியல் பதவிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கப்படாமல் உள்ளது. 20.11.2015ல் வழங்கப்பட்ட நீதிமன்ற தடையை நீக்கிட ஏறக்குறைய மூன்று மாதங்களாகியும் ஒரு நடவடிக்கையும் பணியமைப்பு நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படவில்லை. Counter கூட போடப்படவில்லை.
- ✓ உதவிப் பொறியாளர் / மின்னியல் (2005 Batch) முன்னுரிமைக்கு எதிராக நீதிமன்ற தடையில்லாத போதும், நேரடி நியமன உதவிப் பொறியாளர்கள் சார்பான கடிதத்தை நீதிமன்றத்தில் விசாரிக்காமலேயே அதனை ஏற்றுக்கொண்டு மறுநாளே உதவிப்

www.fromoldbooks.org

பொறியாளர் முன்னுரிமைப்பட்டியலை திரும்பப்பெற்றது பணியமைப்பு நிர்வாகம். நீதி மன்ற தடை ஏதுமில்லை என்று தெரிந்த பின்னரும் முன்னுரிமை பட்டியலை வெளியிட மூன்று மாதங்கள் எடுத்துக்கொண்டது. அதுவும் 2006 Batch பொறியாளர் இடைக்கால தடை உத்தரவு பெற வசதியாக பார்த்து முன்னுரிமையை வெளியிட்டது. எதிர்பார்த்தபடியே 2006 Batch பொறியாளர் சென்னை உயர்நீதி மன்றத்தில் "Status quo" உத்தரவை பெற்றனர். இதனை நீக்கிட இதுவரை எந்த நடவடிக்கையும் பணியமைப்பு நிர்வாகம் எடுக்கவில்லை. இதனால் உதவி செயற் பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வும் தடுக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகள் பணியாற்றிய இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பொறியாளர்கள் உதவி செயற் பொறியாளர் / சார்பு பதவியும் இல்லாமல், உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வும் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- ✓ இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை (இயந்திரவியல்) உள்முகத்தேர்வில் இழைக்கப்பட்ட தவறுகளை, விகிதாசார மீறல்களை நீதிமன்ற தீர்ப்பின்படி சரிசெய்து வழங்கப்பட்ட முன்னுரிமை, முறைப்படுத்தப்படாமல் பணியமைப்பு நிர்வாகம் ஆண்டுக்கணக்கில் நிலுவையில் வைத்துள்ளது. இதனால் இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை / இயந்திரவியல் மற்றும் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை / இயந்திரவியல் பதவி உயர்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
- ✓ தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்வு பட்டியல் அனுமதித்திடுவதற்கும் கால தாமதம் செய்யப்பட்டு வருகின்றது. இதில் நீதிமன்ற தீர்ப்புபடி 22.06.2015 cutoff date என்றும் 20.03.2015 crucial date என்றும் ஒரே பதவி உயர்விற்கு (Junior Engineer Grade-II under Diploma Quota) இருவேறு நிலைகள் உள்ளதை சரிசெய்து பாதிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு நியாயம் வழங்கிட கோரியும் நடவடிக்கை மேற்கொள்ளாமல் பணியமைப்பு நிர்வாகத்தால் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது.
- ✓ உதவி செயற் பொறியாளர் / இயந்திரவியல் பதவி உயர்வுகளும் காரணமின்றி பட்டியல் காலாவதியாகும் வரை நிறுத்திவைக்கப்பட்டது.
- ✓ உள்முகத்தேர்வில் உதவிப் பொறியாளர் மட்டுமின்றி தொழில்நுட்ப உதவியாளர்களும் மிகுந்த தாமதப்படுத்தப்பட்டே தகவல் கேட்கப்பட்டது. அதுபோன்றே பட்டியல் அனுமதிப்பதும் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கூறியவைகளை பணியமைப்பு நிர்வாகம் பாரபட்சமின்றி செயல்பட்டிருந்தால் உரிய நேரத்தில் தீர்த்து வைத்திருக்கமுடியும். ஆனால், பணியமைப்பு நிர்வாகம் அவ்வாறு செயல்படவில்லை. இதனால் பட்டயப் பொறியாளர்கள் அனைத்து நிலையிலும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர்.

மொத்தத்தில் பட்டயப் பொறியாளர்களின் கீழ்காணும் நியாயமான கோரிக்கைகள் பல முறை வாரியமும், அரசும் ஏற்றுக்கொண்டவைகள்,

- 14 ஆண்டுகள் ஒரே நிலையில் பணிமுடித்த **JE I Grade-**க்கு **AEE / NI** வழங்குதல்
- பதவி உயர்வுகள், உள்முகத்தேர்வுகள் தாமதமின்றி வழங்குதல்
- அனைத்து விநியோகப் பிரிவுகளுக்கும் **TA** பதவிகள் அனுமதித்தல்
- **TA-**களுக்கு அரசுத்துறைக்கு இணையாக சம்பளம் வழங்குதல்
- **AE / JE –**க்கு இடையே பொதுப்பெயர் வழங்குதல்
- ஓய்வூதியம் உள்ளிட்ட முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்துதல்
- ஊர்மாறுதல்கள், பதவி உயர்வுகளில் விதிமுறைகள் கடைபிடித்தல்
- **TA/Civil** பதவிகள் அனுமதித்தல்

ஆகியவை ஏற்றுக்கொண்ட பின்னர் 9 மாதங்களுக்கு மேலாகியும் அமல்படுத்தாமல் உள்ளது.

www.fromoldbooks.org

அத்துடன் பதவி உயர்வு, உள்முகத்தேர்வு, முன்னுரிமை போன்ற வழக்கமான நடைபெற வேண்டிய பணிகளில் கூட பணியமைப்பு நிர்வாகம் பாரபட்சமும், அநீதியும் இழைத்து வருவது தொடர்ந்து வருகின்றது.

வாரியத்தலைவர் அவர்களின் உறுதி செய்யப்பட்ட அறிவிப்புகள் கூட நடைமுறைப்படுத்தப்படாததால் பட்டயப் பொறியாளர்கள் மிகுந்த வேதனையும் வருத்தமும் அடைந்துள்ளனர், வருத்தத்துடன் பணி ஓய்வு பெறுகின்றனர். இதனால் பட்டயப் பொறியாளர் மட்டுமின்றி அவர்களுடைய குடும்பத்தினரும் வேதனை அடைந்து வருகின்றனர்.

03.01.2016 அன்று இதனை ஆராய்ந்த மாநில செயற்குழு – அரசும், வாரியமும் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை தாமதமின்றி உடனே அமல்படுத்திடவும், பணியமைப்பு நிர்வாகத்தின் பாரபட்சமான போக்கினை சரிசெய்து நிலுவையிலுள்ள அனைத்து பதவி உயர்வுகள், உள்முகத்தேர்வுகள், முன்னுரிமைகள் பாதிப்பின்றி விரைந்து வழங்கிட வலியுறுத்தி, வருகின்ற;

- ❖ **02.02.2016** அன்று தமிழகம் முழுவதும் அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பாக கோரிக்கைகள் அமல்படுத்திட வலியுறுத்தி **“நுழைவாயிற் கூட்டங்கள்”** நடத்திடவும்,
- ❖ மேலும் தாமதமானால் மாநில பொதுக்குழு முடிவின்படி **மார்ச் மாதத்தில் சென்னையில்** வாரிய வளாகம் முன்பாக **தமிழகம் தழுவிய “தொடர் உண்ணாவிரதப் போராட்டம்”** நடத்திடவும் ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

ஆண்டு முழுவதும் ஆட்கள் பற்றாக்குறை பொருட்கள் பற்றாக்குறை, நியாயமற்ற ஒழுங்கு நடவடிக்கைகள், அதிகார நெருக்கடிகள் என்று பணிபுரிந்து பாதிப்புக்குள்ளான போதும், இயற்கை சீற்றத்தால் வாரியமும், பொதுமக்களும் பாதிப்புக்கு உள்ளானபோதும் நமது கோரிக்கைகளை வாரியம் அமல்படுத்தவில்லையே என நாம் சிறிதும் தயங்காமல் உயிரைப் பணயம் வைத்து இரவு பகலாக பணியாற்றி அரசுக்கும், வாரியத்திற்கும் பெருமையையும், நற்பெயரையும் தேடித்தந்துள்ளோம்.

இப்போதாவது வாரியம், நன்றியுடன் இதனை உணர்ந்து ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை மேலும் தாமதமின்றி அமல்படுத்தி பட்டயப் பொறியாளர் மற்றும் அவரது குடும்பத்தினர் வேதனையை உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் நுழைவாயிற் கூட்டங்களிலும் அதனைத்தொடர்ந்த “தொடர் உண்ணாவிரதத்திலும்” அனைத்து உறுப்பினர்களும் ஒன்றுபட்டு உணர்வு பூர்வமாக கலந்து கொண்டு கோரிக்கைகளை வெற்றிகாணச் செய்திடுவோம்.

இப்படை தோற்கின் எப்படை வெல்லும். வெல்லட்டும் நமது கோரிக்கைகள்.

வாழ்க பொறியாளர் சங்கம்.

இவண்,

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்.







www.fromoldbooks.org